**செய்தி வெளியீடு எண். 788** **நாள்–03 .11.2009**

**செய்தி வெளியீடு**

**<u>5.11.2009 (வியாழக்கிழமை) அன்று, காலை – சிந்தாதிரிப்பேட்டை, கல்யாணம் மேல்நிலைப்பள்ளியில் உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு அடையாள அட்டை (SMART CARD) வழங்கும் விழா</u> மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்குகின்றார்கள்.**

5.11.2009 (வியாழக்கிழமை) காலை 9.30 மணிக்கு, மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை – சிந்தாதிரிப்பேட்டை, கல்யாணம் மேல்நிலைப்பள்ளியில் உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு அடையாள அட்டை (SMART CARD) வழங்குகின்றார்கள்.

இவ்விழாவிற்கு வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு மா.சுப்பிரமணியன் அவர்கள் தலைமையேற்கின்றார்கள். விழாவில் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி வெ. ஷோபனா, இ.ஆ.ப., வரவேற்புரையாற்றுகின்றார்கள். விழாவின் இறுதியில் சென்னை மாநகராட்சியின் மண்டல குழுத்தலைவர் திரு எம்.தனசேகரன்(எ) காமராஜ் அவர்கள், சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் திருமதி ஜே.அஞ்சலிதேவி மற்றும் முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொள்கின்றார்கள். விழாவின் இறுதியில் சென்னை மாவட்ட மாவட்ட வருவாய் அலுவலர் திரு து.முனுசாமி நன்றியுரையாற்றுகின்றார்கள்.

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9